DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No. 87/2019**

அ.சா.5

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | ருத்ரா | Caste: | |
| Husband Name: | காளீஸ்வரன் | Calling: | இல்லத்தரசி |
| Village: | மூவலூர் | Religion: | |
| Taluk: | பரமக்குடி | Age: | 21 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 10.07.2025

( 1,2 எதிரிகள் ஆஜர்.)

**<u>முதன்மை விசாரணை</u>**

நான் பரமக்குடி தாலுகா மூவலூர் கிராமத்தில் வசித்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். அ.சா.1,2 சாட்சிகளான பிரபு , ஜெயலெட்சுமி மற்றும் அ.சா.3 முருகேஷ்வரி, அ.சா.4 பஞ்சு, இறந்து போன நாகு ஆகியோர்களைத் தெரியும். ஆஜர் எதிரிகளைத் தெரியும். நான் இந்து பட்டியலினத்தை சேர்ந்த தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சேர்ந்தவள். எதிரிகள் இந்து மறவர் இனத்தை சேர்ந்தவர்கள். என் வீடு மூவலூர் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அருகே உள்ளது. 18.01.2019 ம் தேதி மதியம் 3.00 மணியளவில் கால்நடை மருந்தகம் அருகே சண்டை நடக்கும் சத்தம் கேட்டது. நானும் என் கணவரின் அண்ணன் பிரபு மற்றும் அவரது மனைவி ஜெயலெட்சுமி ஆகிய மூவரும் ஒரே வீட்டில்தான் வசித்து வருகிறோம். சத்தம் கேட்டு நானும் ஜெயலெட்சுமியும் போனபோது எதிரிகள் இருவரும் என் மச்சான் பிரபுவுடன் சண்டை போட்டு கொண்டிருந்தார்கள். 2 ம் எதிரி கார்செல்வம் என் மச்சான் பிரபுவை

பிடித்துக்கொண்டிருந்தார். 1ம் எதிரி காளேஸ்வரன் கத்தியை வைத்து கொண்டு பொன்னு பார்த்த இடத்தில் எதற்கு என்னைப் பற்றி தப்பாக சொன்னாய் என்று அசிங்கமான வார்த்தைகளால் ஏன்டா தேவுடியா மகனே ஈன பள்ளப்பயலே என்று சொல்லிக்கொண்டு கத்தியால் கழுத்து, நடுவயிறு, இடதுபக்க நெஞ்சு, இடதுபக்க இடுப்பு ஆகிய இடங்களில் கீறிவிட்டார். அதனால் என் மச்சான் பிரபுவுக்கு இரத்தக்காயம் ஏற்பட்டது. நாங்கள் சென்றபோது பள்ள நாயே நீ தப்பித்து கொண்டாய் , என்றைக்கு இருந்தாலும் உன் சாவு என் கையில்தான் என்று எதிரிகள் இருவரும் சொல்லிவிட்டு போய் விட்டார்கள். எதிரிகள் வைத்திருந்ததாக சொல்லப்படும் கத்தி நீதிமன்றத்தில் உள்ள கத்திதானா என்றால் இந்த கத்திபோல் தான் இருந்தது. மேற்படி சம்பவத்தை வேறு யார் பார்த்தார்கள் என்றால் நிறைய நபர்கள் பார்த்தார்கள். யார் என என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. உடனே என் மாமனாருக்கு தெரியபடுத்தினோம். பின்னர் நாங்கள் 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து ஆம்புலன்ஸில் பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். சம்பவம் சம்பந்தமாக நடவடிக்கை யார் புகார் கொடுத்தார்கள் என்றால் தெரியாது.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

கால்நடை மருந்தகத்திற்கு தெற்குபுறம் காடர்ந்தகுடி – தேவிப்பட்டிணம் செல்லும் ரோடு உள்ளது என்றால் சரிதான். கால்நடை மருந்தகத்திற்கு மேற்கே எங்கள் வீடு உள்ளது என்றால் சரிதான். என் வீட்டிற்கு பக்கத்தில் நீலமேகம் என்பவரது வீடு உள்ளது என்றால் சரிதான். கால்நடை மருந்தகத்திற்கு எதிரே தெற்குபுறம் அங்கன்வாடி கட்டிடம், ஊராட்சி நடுநிலைப்பள்ளி உள்ளன என்றால் சரிதான். கால்நடை

மருந்தகம் மாலை சுமார் 5–5.30 மணி வரை செயல்படும் என்றால் சரிதான். அங்கன்வாடி கட்டிடம் மற்றும் பள்ளி நேரம் மாலை 4–4.30 வரை இருக்கும் என்றால் சரிதான். கால்நடை மருந்தகத்திலிருந்து எங்கள் ஊர் பஸ் ஸ்டாப் 50–100 மீ தொலைவில் இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பகுதி மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். கால்நடை மருந்தகத்திற்கு மேற்கு புறம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கக்கூடிய இரும்பு கம்பி உள்ளது என்றால் சரிதான். இரும்பு கம்பியால் சுற்றி பாதுகாப்பு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். கல் ஊண்டி கம்பியால் காம்பவுண்டு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்கள் குடும்பத்திற்கு விவசாயம் தொழில் என்றால் சரிதான். எங்கள் குடும்பத்திற்கு நிலங்கள் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் விவசாயத்திற்காக நிலங்களுக்கு காலை சென்றால் திரும்பி வர மாலை 5.00 மணி ஆகும் என்றால் சரிதான். நான் M.Sc., B.Ed., படித்துள்ளேன். ஆம்புலன்ஸில் நான் சென்றேனா என்றால் இல்லை. ஆம்புலன்ஸ் வரும்போது மணி மாலை 4.30–5.00 இருக்கும். இந்த வழக்கு சம்பந்தமாக என்னை டிஎஸ்பி எப்போது விசாரித்தார் என்றால் சம்பவம் நடந்த அன்று இரவு 6–7.00 மணியளவில் விசாரித்தார். கத்தியின் நீளம் எவ்வளவு நீளம் இருக்கும் என்றால் 1 அடி இருக்கும். அந்த கத்தியில் கைப்பிடி இரும்பால் இருந்தது. இரும்பு கைபிடியின் நீளம் எவ்வளவு இருக்கும் என்றால் தெரியாது. என் மச்சான் பிரபுவுக்கு இரத்தக்காயம் ஏற்பட்டு இரத்தம் சண்டை முழுவதும் வழிந்து தரை முழுவதும் வழிந்தது. சம்பவம் நடந்ததற்கு பின்பு பக்கத்தில் உள்ளவர்கள் 20–30 பேர் வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். என் மச்சானுக்கு கத்தியால் தாக்கியதால் சட்டை கிழிந்திருந்ததா என்றால் சட்டை கிழிந்திருந்தது. எத்தனை இடங்களில்

என்றால் நிறைய இடங்களில். என் மச்சான் பிரபு சம்பவ காலத்தில் என்ன வேலை செய்தார் என்றால் விவசாயம். என் மச்சானுக்கு குடிப்பழக்கம் உண்டு என்றால் சரிதான். எதிரிகளின் வீடு சம்பவ இடத்திலிருந்து 100 மீ தொலைவில் இருக்கும். நான் சண்டை சத்தம் கேட்டபோது என்ன வேலை பார்த்துக்கொண்டிருந்தேன் என்றால் குழந்தையை குளிக்க வைத்திருந்தேன். நான் கால்நடை மருந்தகத்திற்கு சத்தம் கேட்டு 2,3 நிமிடங்கள் கழித்துதான் வந்தேன் என்றால் சரிதான். எதிரிகள் என்ன நிறத்தில் உடை அணிந்திருந்தார்கள் என்றால் ஞாபகமில்லை. நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும், நான் சொன்னது போல் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை என்றும், என் மச்சான் பிரபு குடித்துவிட்டு என் வீட்டிற்கு அருகில் இருந்த மருத்துவமனை வேலியில் தடுமாறி விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகள் யாரும் பிரபுவை தாக்கவில்லை, சாதி பெயரை சொல்லி அசிங்கமாக திட்டவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் குடும்பத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கும் ஏற்கனவே நில பிரச்சனை இருந்து வந்தது என்றும், அந்த காழ்ப்புணர்ச்சியின் காரணமாக பொய்யாக கொடுக்கப்பட்ட புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd./C.Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)